

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், 52 மாணவ – மாணவிகள் மற்றும் 4 ஆசிரியர்கள், அலுவலர்கள் என மொத்தம் 56 நபர்கள் நேற்று முன்தினம் (23.02.2025) முதல் 28.02.2025 முடிய கல்விச் சுற்றுலா செல்வதையொட்டி மலேசியா நாட்டிற்குச் செல்வதற்கு முன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

### திருவாளந்துறை - கை.களத்தூரில் இருந்து

# பெரம்பலூருக்கு கூடுதல் பேருந்து சேவை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், பிப்.25-

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவாளந்துறை ஊராட்சி மற்றும் கை.களத்தூர் ஊராட்சிகளில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் கூடுதல் நடைக்கான பேருந்து சேவையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கின்றார். மக்களின் தேவைகளை அறிந்து அவர்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். குறிப்பாக தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்யும் உயர்ந்த நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து என்ற திட்டத்தினை வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்திடாத ஒரு திட்டமாக ஏழை எளிய மக்களின் போக்குவரத்து செலவினை குறைக்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் திருவாளந்துறை மற்றும் கை.களத்தூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருவாளந்துறை முதல் பெரம்பலூர் வரையிலும், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கை.களத்தூர் முதல் பெரம்பலூர் வரையிலுமான கூடுதல் நடைக்கான பேருந்து சேவை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இதில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், கும்பகோணம் மண்டல போக்குவரத்துத்துறை மேலாண்மை இயக்குநர் இரா.பொன்முடி, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி, வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந. ஜெகதீஷ்வரன், பொதுக்குழு உறுப்பினர் ஆர். முருகேசன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் தலைவர் கே. கே.எம்.குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம்.ரெங்கராஜ்

உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

7 ஆம் ஆண்டு

நினைவு அஞ்சலி

பிப்ரவரி 25



மாவீரன்

சி.முத்துச்சாமி BA.,

கழக தீர்மானக்குழு உறுப்பினர், EX.மாவட்ட ஊராட்சி தலைவர்
EX.நகர கழக செயலாளர்

கழகத்தின் தங்கமே! களத்தில் சிங்கமே உம்மை வணங்குகின்றோம்

வி.என்.மணி குடும்பத்தினர் – மாநில விவசாய அணி து.செயலாளர்
இரா.முத்துவிஜயன் குடும்பத்தினர் – மாநில து.தலைவர், வீட்டு வசதி வாரிய தொ.மு.ச
சி.முத்துச்சாமி குடும்பத்தினர்

உங்கள் பாதங்கள் காட்டிய வழியில் எங்கள் பயணங்கள்

மு.தென்னரசு – மாவட்ட பொறியாளர் அணி து.அமைப்பாளர்
மு.ராஜதுரை – மாவட்ட கழக பிரதிநிதி, 36 வது வட்ட கழக செயலாளர்
மு.இளஞ்சேரன் – மாவட்ட இளைஞரணி து.அமைப்பாளர், 38 வது வட்ட கழக பிரதிநிதி

புதுக்கோட்டை

### ஒன்றியக் கல்வி அமைச்சரின் முடிவு -

# இந்திய கூட்டுறவுக் கூட்டாட்சியின் அடித்தளத்தையே தகர்த்துவிடும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில், இந்திய ஒன்றியத்தினுடைய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டு முதல்வருக்கு எழுதிய கடிதத்தில், தமிழக அரசு புதிய கல்விக் கொள்கையை அரசியல் காரணங்களுக்காக எதிர்ப்பதன் மூலம் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை இழக்கச் செய்து விடாதீர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். (Mr. Pradhan had argued that Tamil Nadu's continued opposition to the NEP "for political reasons" deprived students of immense opportunities.)

இதற்கு, கடலூரில் நடைபெற்ற அரசின் நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் பதிலளித்த முதலமைச்சர் அவர்கள் தமிழர்களின் ஆழ்ந்த நம்பிக்கையை சிதறடிக்கும் வகையில் "தேன்கூட்டில் கல் எரிவதை" போன்ற வேண்டாத செயலில் ஈடுபட வேண்டாமென ஒன்றிய கல்வி அமைச்சரை எச்சரித்துள்ளதோடு, தான் இருக்கும் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலமுழக்கமான "இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்" என்ற முழக்கத்தை எந்த சூழ்நிலையிலும் கைவிடமாட்டோம். "இந்தி திணிப்பு" எத்தகைய வடிவத்தில் வந்தாலும், அதனைத் தடுப்பதற்கு எந்த விலையும் கொடுப்பதற்கு தயாராவோம் என்ற முழக்கத்தை ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எச்சரிக்கையாக மீண்டும் தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாடு, இந்திய ஒன்றியத்தினுடைய ஒரு மாநிலமாக இருக்கலாம். ஆனால், இந்திய ஒன்றியத்திற்கான அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பதிலும், அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை கட்டமைப்புகளை சிறிதும் சேதமின்றிக் கட்டிக் காப்பதிலும், திராவிட முன்னேற்ற கழகம் என்றைக்கும் தயங்கியதில்லை.

ஆட்சியின் அடிப்படை கட்டமைப்பான "ஜனநாயகத்தை" பாதுகாப்பதில் கழக ஆட்சியையே விலையாகக் கொடுத்த வரலாறு "திராவிட முன்னேற்றக் கழகத்திற்குவுண்டு". மேலும், 1937, 1938ம் ஆண்டுகளில் இந்தி மொழியைத் திணிக்கும் பணியின் தொடக்கமாக, பள்ளிகளில் இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பொழுது, திராவிட இயக்கமும், தமிழ் மொழி வளர்ச்சியின் மீது அக்கறையுள்ள சான்றோர்களும் இணைந்து போராடினார்கள் என்ற நிகழ்வுகள் வரலாறாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து இந்திய அரசியல் சட்டம் 1950ம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாள் அமலாக்கப்பட்டதிலிருந்து, 15 ஆண்டுகளுக்கு பின்னர், சட்டத்தின் நிபந்தனையைக் காரணம் காட்டி இந்தி மொழி திணிக்கப்பட்ட காலகட்டத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முன்னெடுத்த போராட்ட களத்தில் ஒட்டுமொத்த தமிழகமே ஓர் அணியில் திரண்டது, தமிழ்நாடு போர்க்களமானது. ஓரிரு மாதங்கள் தமிழ்நாட்டில் ஆட்சியே நடைபெறவில்லை. நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் தியாகம் செய்தார்கள். மாணவர்கள் பலர் துப்பாக்கிச் சூட்டில் மாண்டனர். தங்கள் உயிரைவிட தமிழ்மொழியை நேசித்ததால்தான், தங்களது இன்னுயிரை இந்தி ஏகாதிபத்திய தாக்குதலை தடுப்பதற்காக, அகலியாகவும், அரணாகவும் மாற்றி மொழிப்போர் களத்தில் புதிய வரலாறு படைத்தார்கள்! தமிழ் மொழி என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய தொன்மையான மொழி என்பது மட்டுமல்ல, இலக்கண இலக்கிய வளம் பெற்ற மொழியுமாகும். இன்றுவரை மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் தெரிவித்ததைப் போல் "சீரிளமை குன்றாத மொழி", அவ்வப்போது இலக்கண வரம்பின்படி மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு மறுமலர்ச்சியைப் பெற்ற தமிழ்!

எனவே, அத்தகைய குன்றாவளம் கொண்ட செம்மொழித் தமிழ், இந்த தமிழ் மண்ணில் இரண்டாம் தர மொழியாக ஆக்கப்படுவதை இந்த மண்ணும், மக்களும் என்றைக்கும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதுமட்டுமல்ல, தமிழ் மண்ணோடும், தமிழ் மக்களின் மரபணுவோடும் கலந்துவிட்ட தமிழ் உணர்வு என்பதை ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் புரிந்து கொண்டு தன் நிலைப்பாட்டை கடிதினில் மாற்றிக் கொள்ள வேண்டும். எங்கனம் இங்கிலாந்து நாட்டை "ஜனநாயகத்தின் தொட்டில்" என்று குறிப்பிடுவார்களோ, அதேபோன்று மதச்சார்பற்ற தன்மையின் தொட்டிலாக (Gradle of secularism) தமிழ்நாடு என்றும் இருக்கும் இந்த உணர்வு, அரசியல் சூழ்நிலைகளால் இன்று மலர்ந்ததல்ல, மாறாக தமிழ்நாட்டு மண்ணோடு கலந்த உணர்வு என்பதை 2000 ஆண்டுகளுக்கு முன்பே சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வெளிப்படுத்தினார். இந்த உணர்வுகளின் வடிவமாகத்தான் திராவிட மாடல் ஆட்சியை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்று முன்னெடுத்துச் செல்கிறார் என்பதை ஒன்றியத்தின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் புரிந்து கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வரக்கூடிய எண்ணற்ற வாய்ப்புகளை புதிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதன் மூலம் தமிழ்நாடு இழக்க நேரிடும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படைக் கோட்பாட்டை மையப்படுத்திய பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு "திராவிட மாடல்" ஆட்சியின் மூலம் வெற்றிகரமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், எத்தகைய சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும், அந்தப் பகுதியினரை அடையாளம் கண்டு அந்தக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு, ஆண், பெண் என இரு பாலருக்கும் கல்வி வழங்குவதில் பல்வேறு திட்டங்கள் திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்படுகிறது. ஏழை எளிய குடும்பத்தில் பிறந்த குழந்தைகளின் கல்விக் கனவு தமிழ்நாட்டில் "நிழல் அல்ல நிஜம்" என நடைமுறைப்படுத்துவதன் காரணமாகத்தான், தமிழ்நாட்டின் முதல்வர் தமிழ்நாட்டில் எங்கு சுற்று பயணங்கள் மேற்கொண்டாலும், பள்ளி குழந்தைகளும், பல்வேறு திட்டங்களால் பயன்பெற்ற இருபால் மாணவச் செல்வங்களும் ஓடோடி வந்து முதல்வரைப் பார்த்து "அப்பா" என்று அன்போடு அழைக்கின்ற உருக்கமான காட்சியை முதல்வர் எங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும் பார்க்க முடிகிறது.

புதிய கல்விக் கொள்கையில் "இந்தி மொழியை" மாணவர்கள் விரும்பினால் எடுத்துப் படிக்கலாம் என்ற வாய்ப்பை வழங்கியிருக்கிறோம் என்று ஒன்றிய கல்வித்துறை அமைச்சகம் தெரிவிக்கிறது. இந்த சலுகைக்கு உள்ளேதான் "சதியும்" அடங்கியிருக்கிறது என்பதை புதிய கல்விக் கொள்கையை ஆராய்ச்சிக் கண் கொண்டு ஆழ்ந்து படித்தால் தெளிவாகவே விளங்கும். ஒன்றிய கல்வித்துறையில் எப்படியாவது இந்தி மொழியை கட்டாயமாகப் படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கான சுரங்கப் பாதைதான் வாய்ப்பு(Option) என்கின்ற சலுகையாகும்.

தொடர்ந்து இந்தி மொழித் திணிப்பை எதிர்க்கின்ற போர்க்களங்களை எதிர்கொண்ட தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய கல்வித்துறையின் இந்த திரைமறைவுச் சதித் திட்டத்தை எளிதில் விளங்கிக் கொள்வார்கள் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. எனவே, இந்தி மொழித் திணிப்பை அச்சுறுத்தல் மூலமாகவோ, திரைமறைவுச் சதித் திட்டங்கள் மூலமாகவோ தமிழ்நாட்டில் அமல்படுத்திவிடலாம் என்று ஒன்றிய



பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

அரசு எண்ணுவது "கானல் நீராகத்தான்" முடியும் என்பது உறுதி. மாநிலங்களின் கூட்டு அமைப்பான ஒன்றிய அரசு மாநிலங்களுக்கும், ஒன்றியத்திற்கும், அதிகாரங்கள் இந்திய அரசியல் சட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இது தவிர்த்து, மூன்றாவது பட்டியலாக "ஒத்திசைவுப் பட்டியல்" உள்ளது. அதில் ஒன்றிய அரசும், மாநில அரசும் ஏற்றுக்கொண்ட பின்னர்தான் எந்த ஒரு மசோதாவும் ஒத்திசைவுப் பட்டியலிலுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சட்ட வடிவம் பெறும். கல்வி தொடர்பான அதிகாரம் 42வது அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம், ஒத்திசைவுப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. இந்தச் சட்ட திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னர், மாநிலப் பட்டியலில்தான் கல்விக்கான அதிகாரங்கள் இடம் பெற்றிருந்தது.

எனவே, இந்த ஒத்துசைவுப் பட்டியலில் உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட புதிய கல்விக் கொள்கையை மாநிலங்களின் எதிர்ப்பை மீறி அந்த குறிப்பிட்ட மாநிலங்களில் அமல்படுத்த முயற்சிப்பது கூட்டாட்சி முறைக்கு ஏற்புடையதல்ல. இந்திய ஒன்றியம் பன்முகத் தன்மை கொண்டது என்பதை யாராலும் மறுக்கவியலாது. இந்த சூழ்நிலையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு "ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்ற தங்கள் முழக்கத்திற்கு படிக்கட்டாக இருக்க வேண்டுமென்ற அரசியல் உள்நோக்கத்தின் அடிப்படையில்தான் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இந்தி மொழியை எப்படியாவது திணித்துவிட வேண்டுமென்ற தீவிரமான முயற்சியின் வெளிப்பாடுதான் இந்த புதிய கல்விக் கொள்கை என்பதை தமிழ்நாட்டு மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள். இந்த சூழ்நிலையில் தமிழ்நாட்டுக்கு திட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2152 கோடி ரூபாயை புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் வழங்க முடியுமென நிபந்தனை விதிப்பது, கூட்டாச்சி முறைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். திட்டங்களின் அடிப்படையில் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை நிபந்தனையின்றி தொடர்புடைய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அனுப்பிட வேண்டும்.

மேலும், மாநிலங்கள் செலுத்துகின்ற வரியினை மையப்படுத்திதான் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒன்றிய அரசு, மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அனுப்புவதில் நிபந்தனை விதிக்குமானால், வரி செலுத்தும் மாநிலங்களுக்கும் அந்த உரிமை உண்டு என்பதை ஒன்றிய கல்வி அமைச்சர் உணரவேண்டும். ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பயன்பட இருக்கிறது. எனவே, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் இதில் அரசியல் செய்ய வேண்டாம், தேவையில்லாமல் அரசியல் விபரீதங்களை விலைக்கு வாங்க வேண்டாம் என்பதே தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கையாகவுள்ளது. நடுநிலையான பத்திரிகைகளும் தமிழ்நாட்டின் முதல்வரின் கருத்தையே வழிமொழிகின்றன.